19.11.2019

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

அசல் வழக்கு எண். 330/2012

பி.சா.1 (ஆரோக்கியசாமி த/பெ.அற்புத அந்தோணி) குறுக்கு விசாரணை:

பிராதில் வாதிகள் எந்தந்த புல எண்ணுக்கு உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எந்தந்த புல எண்ணில் வாதிகள் உரிமை கொண்டாடுகிறார்கள் என்றால் பிராதில் கண்டுள்ள 3, மேலும் அதை தவிரவும் உரிமை கொண்டாடுகிறார்கள். நான் வழக்கில் எத்தனாவது பிரதிவாதி என்றால் 2ம் பிரதிவாதி. 3ம் பிரதிவாதி வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். நான் எனது எதிர்வழக்குரையில் எந்த புல எண் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 100/9பி1ல் வடபகுதியில் கிழமேல் 41 அடி, தென்வடல் 23 அடியும் ஆக கூடுதல் 943 சதுரடி என்று எனது கட்சியில் சொல்லியுள்ளேன். 3ம் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்றால் அவர் என் மனைவி ஆவார். அதில் என்ன சொல்லியுள்ளோம் என்றால் 26.06.1985 தேதியிட்ட கிரையப்பத்திரத்தை பற்றி சொல்லியுள்ளோம். மேற்படி கிரையத்தை யார் எழுதி கொடுத்தார்கள் என்றால் சுக்கிரன் மனைவி பிச்சையம்மாள் எழுதி கொடுத்தார். பிச்சையம்மாளுக்கு எப்படி பாத்தியம் என்றால் அது அவருடைய கணவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். அவர் கணவருக்கு எந்த பத்திரத்தின் மூலம் கிடைத்தது என்றால் 1936ல் பேச்சிமுத்துவின் பத்திரத்தின் மூலம் கிடைக்கப் பெற்றது.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.